ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1998/36 - 2016 දෙසැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2016.12.23

*1998/36 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் யாழ் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டத்தின் கீழ் அல்லைப்பிட்டி புதிய உள்ளிளுப்புக் கிணறு, உந்தும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கும் பழைய உள்ளிளுப்புக் கிணறு, நீர்க் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, திசெம்பர் 15,
5/2/3/1246.

**அட்டவணை**

யாழ் மாவட்டத்தில், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில், இல. J/11 மாங்கும்பன் கிராம அலுவலர் பிரிவில், மாங்கும்பன் ஊரில் கமானி தோட்டம் செட்டிக்காடு எனும் 04 ஹெக்டெயார் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் இருக்கும் காணித்துண்டு :-

1. துண்டு இல. -1 விஸ்தீரணம் - 1.416 ஹெக்டெயார்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | மாங்கும்பன் வீதி ; |
| கிழக்கு | : | திரு. ஏரம்பு அவர்கள் மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணி ; |
| தெற்கு | : | திரு. ஏரம்பு அவர்கள் மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணி ; |
| மேற்கு | : | திரு. ஏரம்பு அவர்கள் மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணி. |

*2. துண்டு இல. -2 விஸ்தீரணம் - 2.579 ஹெக்டெயார்*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | கால்வாய் ; |
| கிழக்கு | : | எம். அரசம்மா அவர்கள் உரிமைகோரும் காணி ; |
| தெற்கு | : | தம்பையா இரத்தினசிங்கம் அவர்கள் உரிமைகோரும் காணி ; |
| மேற்கு | : | மாத்தியாவரனாம் யோகராஜா அவர்கள் உரிமைகோரும் காணி. |

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:

1. திரு. சிவனேசவரன் மற்றும்
திருமதி சிவனேசன் பத்மலோசனி,
மாங்கும்பன்,
அல்லைப்பிட்டி.

2. திரு. வீ.ஏரம்பு,
பிரிவு இல. 05,
மாங்கும்பன்,
வேலணை.

1 - 199

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு போகஹகும்புர நீர் வழங்கல் திட்டத்தின் நீர் சுத்திகரிப்பு அலகினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழே உள்ள அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, திசெம்பர் 15,
5/2/1/1244 .

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில், வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவில், அலவதுகொட கிராம அலுவலர் பிரிவில், அலவதுகொட வெலிஹெலபதன கிராமத்தில் அமைந்துள்ள வெலிஹெலபதன என்றழைக்கப்படும் காணியில் முழு விஸ்தீரணத்தில் இருந்து 20 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | கரத்த வீதி ; |
| கிழக்கு | : | அக்காணியின் எஞ்சிய பகுதி ; |
| தெற்கு | : | அக்காணியின் எஞ்சிய பகுதி ; |
| மேற்கு | : | அக்காணியின் எஞ்சிய பகுதி. |

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:

1. திரு. என். எம். ஜெயதிலக,
கிரிந்திவெல,
போகஹகும்புர.

1 - 200

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.